பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

31 05 2024 **FRIDAY** 6 45 **AM**

வணக்கம். மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- வாக்குப்பதிவு சதவீதத்தில் எந்த மாறுதலும் செய்ய இயலாது என தேர்தல் ஆணையம் மீண்டும் தெளிவுபடுத்தியுள்ளது.
- நிலச்சரிவு அபாயத்தை தடுக்கும் வகையில் மண் ஆணி திட்டம் சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.
- அரசு பணிக்கான தேர்வுகளில் தமிழ்மொழி தகுதித் தேர்வில் 40 மதிப்பெண் பெற வேண்டும் என்ற தமிழக அரசின் அரசாணைக்கு தடை விதிக்க சென்னை உயர்நீதிமன்றம் மறுத்துள்ளது..
- தமிழகத்தின் ஒருசில இடங்களில் இன்று வெப்பநிலை இயல்பை விட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது..
- ஒலிம்பிக் தகுதிச்சுற்று குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் அமித் பங்கல் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>><<<<

வாக்குப் பதிவு சதவீதத்தில் எந்த மாறுதலும் செய்ய இயலாது என தேர்தல் ஆணையம் மீண்டும் தெளிவுபடுத்தியுள்ளது.

தலைமைத் தேர்தல் ஆணையர் திரு ராஜீவ் குமார் ஆகாஷவாணிக்கு அளித்த சிறப்புப் பேட்டியில் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக பரப்பப்படும் வதந்திகளுக்கு அவர் மறுப்புத் தெரிவித்தார். வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் முகவர்களுக்கு வாக்குப்பதிவு விவரங்களைக் கொண்ட 17-சி படிவத்தின் நகல் வழங்கப்படுவதாக அவர் கூறினார்.

எனவே இதில் மாற்றங்களைச் செய்ய இயலாது என்று கூறினார். வாக்குப் பதிவு தொடர்பான விவரங்கள், தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

>>>><<<<

வளமான கலாச்சாரத்தை கொண்ட நாடு இந்தியா என தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி தெரிவித்துள்ளார்.

கோவா மற்றும் சிக்கிம் மாநிலங்கள் உருவான தினத்தை ஒட்டி, ஆளுநர் மாளிகையில் நேற்று மாலை நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் உரையாற்றினார்.

நாட்டின் ஒவ்வொரு மாநிலமும், ஒவ்வொரு வகையில் வளமான கலாச்சாரத்தை கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

மாநிலங்கள் உருவான தினத்தை நாட்டின் அனைத்து பகுதிகளில் உள்ள மக்களும் கொண்டாட வேண்டும் என்று திரு. ஆர். என். ரவி கேட்டுக் கொண்டார்.

>>>><<<<

நிலச்சரிவு அபாயத்தை தடுக்கும் வகையில் மண் ஆணி திட்டம் சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், நீலகிரி மாவட்டத்தில் புதிய தொழில்நுட்பத்தின் அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுவதாக கூறப்பட்டுள்ளது.

இதன்மூலம் மண்ணின் உறுதித்தன்மை அதிகரிக்கப்படுவதாகவும், தற்போதைய முறையைக் காட்டிலும், இதற்கான செலவு குறைவு என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

அரசு பணிக்கான தேர்வுகளில் தமிழ்மொழி தகுதித் தேர்வில் 40 மதிப்பெண் பெற வேண்டும் என்ற தமிழக அரசின் அரசாணைக்கு தடை விதிக்க சென்னை உயர்நீதிமன்றம் மறுத்துள்ளது.

இதுதொடர்பான வழக்கு, நீதிபதி திரு. சுவாமிநாதன் முன்பு விசாரணைக்கு வந்தது.

அவர் பிறப்பித்த உத்தரவில் விண்ணப்பதாரர்களுக்கான கல்வித் தகுதியை நிர்ணயிக்க அரசுக்கு அதிகாரம் உள்ளது என்றார்.

மக்களுடன் தொடர்பு கொள்ள தமிழ்மொழி தேர்ச்சி அவசியம் என்ற வாதம் சரியானது என அவர் தெரிவித்தார்.

அரசின் கொள்கை முடிவில் தலையிட முடியாது என்று கூறி, எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதிபதி தள்ளுபடி செய்தார்.

>>>><<<<

சாலை விதிகளை அனைவரும் முறையாக கடைபிடிக்க வேண்டும் என கோவை மாநகர காவல் ஆணையர் திரு. பாலகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

கோவையில் இதுதொடர்பாக நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிக்குப் பின், அவர் செய்தியாளர்களிடம் பேசினார்.

(சவுண்ட் பைட் - பாலகிருஷ்ணன் 44 செகண்ட்ஸ்)

>>>><<<<

நாகப்பட்டினம் வேளாங்கண்ணி பேராலயத்தில் மாதாவிற்கு முடிசூட்டும் நிகழ்ச்சி விமரிசையாக நடைபெற்றது.

இதில் வெளிமாவட்டங்கள் மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - செல்வன் 40 செகண்ட்ஸ்)

>>>><<<<

நெல்லையிலிருந்து வடமாநில புனித தலங்களுக்கு சுற்றுலா ரயில் இயக்கப்படவுள்ளதாக ஐ.ஆர்.சி.டி.சி-யின் மண்டல பொது மேலாளர் திரு. ராஜலிங்கம் பாசு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரும் 6 ஆம் தேதி இந்த ரயில் நெல்லையிலிருந்து புறப்படவுள்ளதாக கூறினார்.

(வாய்ஸ் பைட் - ராஜலிங்கம் பாசு 48 செகண்ட்ஸ்)

>>>><<<<

மக்களவைத் தேர்தலில் பிஜேபி வெற்றிபெற்று, மீண்டும் ஆட்சியமைக்கும் என அக்கட்சியின் மாநிலத்தலைவர் திரு. அண்ணாமலை நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகே செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் பிஜேபி வளர்ச்சி கண்டு வருவதாக கூறினார்.

கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் மண்டபம், தனியார் அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும், அந்த அமைப்பின் அழைப்பின் பெயரிலேயே பிரதமர் திரு. நரேந்திர மோடி அங்கு சென்றுள்ளதாகவும் திரு. அண்ணாமலை தெரிவித்தார்.

>>>><<<<

தமிழகத்தின் ஒருசில இடங்களில் இன்று வெப்பநிலை இயல்பை விட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை அதிகபட்ச வெப்பநிலை 41 டிகிரி செல்சியஸை ஒட்டி பதிவாகும் என அந்த மையம் கூறியுள்ளது.

கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம் உள்ளிட்ட மாவட்டங்களின் சில இடங்களில் நாளையும் நாளை மறுநாளும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, திருப்பத்தூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று மாலை கனமழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இருவரிச் செய்திகள்

சீனா மற்றும் அரபு நாடுகளின் தலைவர்கள் மாநாடு பெய்ஜிங்கில் சீன அதிபர் திரு ஜி ஜின்பிங் தலைமையில் நடைபெற்றது.

>>>><<<<

கத்தாரில் உள்ள இந்திய தூதரகத்தின் சார்பில் இந்திய மாம்பழங்கள் திருவிழா தோஹாவில் நேற்று தொடங்கி 10 நாட்கள் நடைபெறுகிறது.

>>>><<<<

புதுச்சேரியில் கோடை விடுமுறைக்குப் பின் ஜூன் 12-ம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என அந்த யூனியன் பிரதேச பள்ளிக் கல்வித் துறை தெரிவித்துள்ளது.

>>>><<<<

பணியாளர் தேர்வாணையம் நடத்தும் இளநிலைப் பொறியாளர் தேர்வு ஜூன் 5 முதல் மூன்று நாட்களுக்கு தென் மண்டலத்தில் சென்னை, மதுரை, கோவை உள்ளிட்ட 21 இடங்களில் நடைபெறும் என்று அந்த ஆணையம் அறிவித்துள்ளது.

>>>><<<<

பழங்குடியின மாணவர்கள் வெளிநாட்டு ஆராய்ச்சிப் படிப்பைத் தொடர மத்திய பழங்குடியினர் நலத்துறை அமைச்சகம் வழங்கும் கல்வி உதவித் தொகையைப் பெற இணைய தளம் மூலம் இன்றைய தினத்துக்குள் விண்ணப்பிக்கலாம் என காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச் செல்வி மோகன் கூறியுள்ளார்.

>>>><<<<

கள்ளக்குறிச்சி மக்களவைத் தொகுதியில் பதிவான தபால் வாக்குகளை எண்ணும் அலுவலர்களுக்கான பயிற்சிக் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் நடைபெற்றது.

>>>><<<<

தேனி மாவட்டம் மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 51 அடியை எட்டியுள்ளதை அடுத்து தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள கரையோரப் பகுதி மக்களுக்கு முதல் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருககோவிலில் நேற்று நடைபெற்ற உண்டியல் காணிக்கை எண்ணும் பணியில் ஒரு கோடியே 35 லட்சம் ரூபாய் காணிக்கை கிடைத்துள்ளதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

>>>><<<<

விமானப்படையின் அக்னி வீர் வாயு இசைக் கலைஞர் ஆட்சேர்ப்பு ஜூலை 7-ம் தேதி முதல் 12-ம் தேதி வரை நடைபெறவுள்ள நிலையில் இதில் பங்கேற்க சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த தகுதியுள்ள இளைஞர்கள் வரும் 5-ம் தேதிக்குள் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் திருமதி ராஷ்மி சித்தார்த் ஜகடே கூறியுள்ளார்.

>>>><<<<

மத்திய அரசின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு தரநிலைகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி தர நிர்ணய அமைப்பு சார்பில் சென்னையில் நேற்று நடைபெற்றது.

>>>><<<<

விளையாட்டுச் செய்தி

ஒலிம்பிக் தகுதிச் சுற்று குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் அமித் பங்கல் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியில் ஆடவர் 51 கிலோ எடைப்பிரிவில் அவர், மெக்சிகோவின் மௌரிசியோ ரூயிஸை வென்றார்.

>>>><<<<